Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**CC No. 1/2014**

-

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணியன் | Father/Husband Name | : ராஜேந்திரன் |
| Calling | : | Date | : 11.08.2025 |
| Age | : | | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of August 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசுதரப்பில் முதல் விசாரணை**

நான் பெரியசூரக்குண்டில் குடியிருந்துவருகிறேன், மேலூரில் உள்ள ராஜகோபால் இரு சக்கர வாகன பைனான்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அசா1 கரிகாலன் மற்றும பட்டியல் சாட்சி 2 முதல் 11 வரை எனக்கு தெரியும். நான் கடந்த 12.02.2005 ம் தேதி நான் மேலூர் அரசு கலை கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன், அன்று கல்லூரிக்கு சென்றபோது பிரச்சனை என்பதால் கல்லூரி விடுமுறை விடப்பட்டது என நிர்வாகத்தினர் கூறினார். அதனால் நான் கல்லூரியில் உள்ள விளையாட்டு மைதானம் வழியாக சென்றுகொண்டிருந்தேன். அப்போது சுமார் 6, 7 நபர்கள் கூடியிருந்தார்கள். சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது கரிகாலன், பிரித்வி, சுந்தரபாண்டி, தினேஷ் ஆகியோர்கள் மைதானத்திற்கு அருகே வெட்டப்பட்டு கீழே கிடந்தார்கள், ரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது, நான் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு மேலூர் அரசு மருத்துவனையில் சேர்த்தேன். பின்னர் யார் அவர்களை தாக்கினார் என்று விசாரித்தபோது ராஜேந்திரபிரசாத், பழனிக்குமார், செல்லபாண்டி, பிரசாத், தமிழ்முருகன்

தாக்கினார்கள் என்று தெரிந்துகொண்டேன். இதுசம்ந்தமாகபோலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முந்தைய தினமே எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கள் கல்லூரிக்கு வந்து செல்வதற்கான வழி திருச்சி – மதுரை மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எங்கு, எத்தனை மணிக்கு எவ்வளவு நேரம் போலீசார் விசாரித்தார்கள் என்றால் 1/4 மணி நேரம் விசாரித்தார்கள், எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. போலீசார் விசாரணையில் என் மீது வழக்கு உள்ளது என்று சொன்னேனா என்றால் போலீசாருக்கு தெரியும் நான் சொல்லவில்லை. 12.02.2005 ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எத்தனை மணிக்கு கல்லூரிக்கு சென்றேன் என்றால் காலை 10.00 மணிக்கு சென்றேன். எந்த நுழைவு வாயில் வழியாக கல்லூரிக்கு சென்றேன் என்றால் பிரதான நுழைவு வாயில் வழியாக சென்றேன். நான் கல்லூரிக்கு சென்ற உடனே முந்தைய தினமே எனது கல்லூரி கால வரையற்ற விடுமுறை விடப்பட்ட விவரம் தெரிந்ததா என்றால் அங்கு சென்றபின் தெரிந்தது. அதேபோல் அன்று குற்றம் சுமந்தப்பட்ட ஆதரவாக எங்கள் தரப்பினர்களை கைது செய்ய சொல்லி அவர்கள் கல்லூரிக்குள் உள்ளிருப்பு போராட்டம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) சம்பவத்தை நான் பார்க்காததால் யார், யார், யாரை தாக்கினார்கள்

என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களை நான் மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, நான்தான் சேர்த்தேன். நான்தான் மருத்துவரிடம் நடந்த விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் காயம்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்கவில்லை, என் மீது எதிரிகள் தரப்பில் வழக்கு தாக்கல் செய்ததால் நான் தலைமறைவாக இருந்தேன், ஆனால் நான்தான் மருத்துவமனையில் சேர்த்தாக எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.